## புதிய தொழில் வாய்ப்புகள் குறித்து ‘கல்வி’ தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்படும்!

## ஆட்டோ ஓட்டும் பெண்கள் – திருநங்கைகள் 1000 பேருக்கு ரூ 1 லட்சம் மானியம்!

# 2 இலட்சம் இளைஞர்களுக்கு - தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும்!

## சட்டப் பேரவையில் – தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவிப்பு!

சென்னை,ஜீன்.23-

**சட்டப் பேரவையில் நேற்று முன்தினம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு அமைச்சர் சி.வெ. கணேசன் அளித்த பதிலுரையில், “ஆட்டோ ஓட்டும் பெண்கள் மற்றும் திருநங்கைகள் 1000 பேருக்கு தலா ரூ. 1 லட்சம் மானியம் வழங்கப்படும்” - “2 இலட்சம் இளைஞர் களுக்கு - தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்படும்” என்பன உள்ளிட்ட ஏராளமான அறிவிப்புகளை வெளியிட்டார்.**

**அமைச்சர் சி.வெ.கணேசனின் பதிலுரை வருமாறு:**

நான்காவது முறையாக இந்த மாமன்றத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை யின் சார்பில் பதிலுரை அளிக்கின்ற இந்த வாய்பை அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். “அருந்தமிழால் அனைவரையும் ஈர்த்து, ஆதிக்கம் அனைத்தையும் தன் எழுத்தால் வென்று என் உயிரி னும் மேலான அன்பு உடன்பிறப்பே” என்ற வார்த்தை களால் மொத்த தமிழ்நாட்டையும் தட்டியெழுப்பிய சிற்பி; நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய நூற்றாண்டு நாயகர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகின் றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதல்வர் தளபதியின் வழி; தந்தை பெரியாரின் வழி; பேரறிஞர் அண்ணாவின் வழி; முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞ ரின் வழி. தமிழ்நாட்டின் நலன் காப்பதே என் வாழ் வின் இலட்சியம் என்று சொல்லி, இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக, ROLE MODEL ஆட்சி நடத்தி வருகின்ற நல்லாட்சி நாயகர், இந்தியாவை காப்பாற்ற மன்னிக்க வும்--இந்தியாவை காப்பாற்ற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அழைக்கிறேன் என்ற அந்த ஒற்றை சொல் தான் இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்திருக்கி றது என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

‘40-ம் நமதே, நாடும் நமதே’ என்ற முழக் கம் எதிரொலிக்க காரணம், கடந்த மூன்றாண்டுக் காலத்தில் அவர் நிறைவேற்றிய முத்தான திட்டங்கள்தான் என்பதை நாம் அனைவரும் அறி வோம். நம் முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் இந்த சட்டசபை உச்சத்தை தொட்ட சபை! தேவையற் றவைகளை விட்ட சபை! நாட்டிற்கான நலன்களை நட்ட சபை! அதன் விளைவாகவே மக்கள் அளித்த மகத்தான தீர்ப்புதான் 40-க்கு 40. 40 என்கிற எண் ணுக்கு எண்ணற்ற சிறப்புகள் உண்டு. கணிதத்திலும் அதற்கு நான்காம் எண்கோண், எண்கோண எண் என்கிற மதிப்பு உண்டு. எல்லா நம்பிக்கைகளும் 40 என்கிற எண் மகத்துவம் வாய்ந்தது. விளையாட்டுகளில்கூட அடிப்பந்தாட்டத்தில் அதற்கு ஓர் இடம் உண்டு. இலக்கியத்திலும் இன்னா நாற்பது; இனி யவை நாற்பது; கார் நாற்பது; களவழி நாற்பது என்ற சிறப்புகள் உண்டு. இந்திய அரசியல் வரலாற்றில் மாபெரும் வெற்றிகளைத் தொடர்ந்து குவித்து வரும் வெற்றி நாயகர் முதலமைச்சர் அவர்களை வணங்கு கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெ ரும் இயக்கத்தில் இளைஞரணியினருக்கு புதிய வெளிச்சம் தரும் இளைய சூரியனாய், தமிழ்நாட்டு அரசியலில் சூறாவளி காற்றாய், தமிழ்நாட்டு விளை யாட்டு வீரர்களுக்கெல்லாம் ஆக்கமும், ஊக்கமும் தரும் நம்பிக்கை நாயகனாய், தமிழ்நாட்டு இளைஞர் களுக்கெல்லாம் நல்வழிகாட்டும் திசைக்காட்டியாய், கழகத்தினருக்கும், பொதுமக்களுக்கும் இன்முகம் காட்டி, நமது முதலமைச்சர் அவர்களின் தூதுவராக 8,100 கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் பயணம் செய்து, 40 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் சென்று, 121 இடங்களுக்குமேல் பிரச்சாரம் செய்து, 40 நாடாளுமன் றத் தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி வேட்பாளர் களை வெற்றிபெறச் செய்த எனது அரசியல் கலங்கரை விளக்கம், எனது அரசியல் கலங்கரை விளக்கம் அண் ணன் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங் குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவையில் எல்லோருக்கும் மிகப் பெரிய மூத்தவராக, எங்களுக்கெல்லாம் வழிகாட்டி யாக இருக்கக்கூடிய நீர்வளத் துறை அமைச்சர், கழ கத்தின் பொதுச் செயலாளர் அண்ணன் அவர்களுக் கும், மற்றுமுள்ள அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர் நலத் துறை. மாபெரும் மாளி கைகளையும், அண்ணாந்து பார்க்கிற அடுக்குமாடிக் கட்டடங்களையும், எழில் மிகுந்த காட்சிக்கூடங்களை யும், உடுத்தி மகிழ்கின்ற ஆடைகளையும், தோலைக் கொண்டு காலைப் பொருத்தும் காலணிகளையும், விரைவாகச் செல்ல வண்ணமிகு ஊர்திகளையும், உற்பத்தி செய்ய தன்னையே தேய்த்துக்கொண்டு மெழுகுவர்த்தியாக உருகி உலகிற்கு ஒளி வழங்கும் ஒப்பந்த ஒப்பற்ற தொழிலாளர்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் அரசுதான் தளபதியின் அரசு என்ப தைப் பெருமையுடன் தெரிவித்துக்கொண்டு, எனது உரையைத் தொடங்குகிறேன்.

தொழிலாளர்களின் உரிமைகளைப் பாது காக்கும் மாநிலம் தமிழ்நாடு. தொழிலாளர் நலன் மற் றும் தொழில் வளர்ச்சிக்கு இடையேயான சமவெளி யைத் தொடர்ந்து பாதுகாத்து வருகிறது நமது அரசு. நமது அரசு பொறுப்பேற்றதிலிருந்து எப்போதும் தொழில் அமைதியை பேணிக்காத்து வருகிறது. 2024 ஆம் நிதியாண்டில் சமரச அலுவலர்களால் 1,815 தொழில் தாவாக்கள் சுமூகமாக முடிக்கப்பட்டுள்ளது என்பதே இதற்கு சான்றாகும். இந்த அரசு பொறுப் பேற்ற நாளிலிருந்து தொழிலாளர்களின் நலனுக்காக நடவடிக்கை எடுத்து வருகிறது. உதாரணமாக, 83 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மறு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. குழந்தைத் தொழி லாளர் முறை மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஆகியவற்றை அகற்றுவதில் நமது மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக அமைந் துள்ளது. அனைத்து துறை அலுவலர்களுடன் ஒன்றி ணைந்து குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலுமாக ஒழிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அமலாக்கத் துறை அலுவலர்க ளால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 65 குழந்தை கள், 274 வளரிளம் பருவத் தொழிலாளர்கள், 196 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, அவர்க ளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருகிறது. 2025 ஆம் ஆண்டுக்குள் குழந்தைத் தொழிலாளர் முறை யினை தமிழ்நாட்டில் அகற்றியே தீர வேண்டுமென்ற நமது முதலமைச்சர் அவர்களின் குறிக்கோளினை நிறைவேற்றுவோம் என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங் கள். அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனுக்காக பல்வேறு நல வாரியங்களை ஏற்படுத்தி, அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆவார் என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நமது முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில், தமிழ்நாடு உப்பளத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ் நாடு இணையம் சார்ந்த கிக் (GIG) தொழிலாளர்கள் நல வாரியமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், தமிழ் நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்களின் நலனுக்காக பங்களிப்புத் தொகையாக ரூ. 5 கோடியில் நல நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச் சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக கடந்த நிதியாண்டில் தமிழ்நாடு அமைப் புச் சாரா ஓட்டுநர் மற்றும் தானியங்கி மோட்டார் வாக னங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத் தில் பதிவு பெற்றுள்ளவர்களில் பெண்கள், திருநங்கைகளுக்கு 500 பேருக்கு புதிய ஆட்டோ ரிக்ஷா வாங்க செலவினத்தில் ரூபாய் 1 இலட்சம் மானி யமாக வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித் துக்கொள்கிறேன். தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத தொழிலாளர்கள் பணியின்போது மரணம் அடைந் தால், அவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் 5 இலட்சம் இழப்பீடாக வழங்கப்பட்டுவருகிறது. இத்தொகையி னைப் பெறுவதற்கு அவர்கள் ஓராண்டு காலம், இரண்டு ஆண்டு காலம், மூன்று ஆண்டு காலம், ஐந்து ஆண்டு காலம் காத்திருக்கவேண்டிய சூழ்நிலை கடந்த காலம் இருந்து வந்தது. தற்பொழுது நமது தள பதி அவர்களின் நல்லாட்சியில் விபத்து ஏற்பட்டு தொழி லாளர்கள் மரணம் அடைந்த 48 மணி நேரத்திற்குள் ளாக இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதை இம்மன்றத்தில் பெருமையுடன் தெரிவித் துக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக கரூர் தாலுகா, காட்டுப்பாளையம் என்ற இடத்தில் கடந்த 15-11-2022 அன்று கட்டுமான பணியின்போது நடை பெற்ற விபத்தில் திரு. சிவகுமார் மற்றும் திரு. சிவா ஆகியோர் மரணம் அடைந்தனர். இரு குடும்பத்தினருக்கும் இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 10 இலட்சத்தை 48 மணி நேரத்திற்குள்ளாக அந்த குடும்பத்திற்கு வழங்கியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று ஊட்டி, காந்திநகர் போன்ற பகுதி யில் கடந்த 7-2-2024 ஆம் தேதியன்று பகல் 12 மணி யளவில் கட்டுமான பணியின்போது, மண் சரிந்து விபத்து ஏற்பட்டு அங்கு பணியாற்றிய திருமதி ராதா, திருமதி சங்கீதா, திருமதி சுதா, திருமதி சசிகலா, திருமதி பாக்கியம், திருமதி முத்துமீனாட்சி ஆகியோர் மரணம் அடைந்தனர். அவர்களின் குடும்பத்திற்கு 8-2-2024 தேதியன்று பிற்பகல் 6-00 மணிக்கு அதாவது, விபத்து நடந்து 30 மணி நேரத்திற்குள்ளாக ரூபாய் 30 இலட் சத்தை அளித்த அரசு தளபதியின் அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்ளவிரும்புகின்றேன். நமது முதல் வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு, 7-5-2021 முதல் 17-6-2024 வரை 16,62,847 புதிய உறுப்பி னர்கள் வாரியத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்ப தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். 7-5-2021 முதல் 17-6-2024 வரையான காலத்தில், இந்த 3 ஆண்டு காலத்தில் 21,02,533 தொழிலாளர்க ளுக்கு 1646,12,38,019 ரூபாய் நலத்திட்ட உதவிகள் இத்துறையின் மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது என் பதைத் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

வேலைவாய்ப்புத் துறை. வேலைவாய்ப்புத் துறை யைப் பொறுத்தவரையில் நம்முடைய பேரவைத் தலைவர் சொன்ன காரணத்தினால் விரைவாக நான் சுருக்கமாக சொல்ல விரும்புகின்றேன். முதன்முதலில் படித்துவிட்டு இளைஞர்கள் அந்த சான்றிதழைக் கொண்டுபோய் பெட்டியிலோ, பீரோவிலோ வைத்து



விடுவார்கள். வேலை கிடைக்குமா என்று மிகப்பெரிய ஏக்கத்தோடு இருந்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் முதன்முதலில் படித்த இளைஞர்க ளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவோம் என்ற நம்பிக்கையை உருவாக்குகின்ற வகையிலே நான் முதல்வன் என்கின்ற திட்டத்தைக் கொண்டுவந்து அவருடைய பிறந்தநாள் மார்ச் 1 ஆம் நாள் நான் முதல் வன் என்ற இணையதளத்தை உருவாக்கி, அந்த இணையதளத்திலே என்ன படிக்கலாம், எப்படி படிக்க லாம், எங்கு சென்று படிக்கவேண்டும், என்ன பயிற்சி எடுக்கவேண்டும், அதற்கு உதவித் தொகை பெறுவது எப்படி, வேலைக்கு எப்படிச் செல்லவேண்டும் என் கின்ற விவரங்களையெல்லாம் கொடுத்த காரணத்தி னால் இன்றைக்கு பல இலட்சம் இளைஞர்கள் படித்து பல்வேறு வேலைகளிலே அமர்ந்திருக்கிறார்கள் என் பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளவிரும் புகின்றேன்.

சுருக்கமாக சொல்லவேண்டுமென்றால், இப்போது ஒருபுறம் அரசாங்கத்தில் வேலை கொடுத் துக்கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்தில், முதல மைச்சர் அவர்களின் ஆலோசனை, அறிவுரையை கேட்டு வேலைவாய்ப்புத் துறையில், வேலைவாய்ப்பு முகாம்கள் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட் டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும், ஒவ்வொரு தொகு தியிலும் நடத்தி முதலமைச்சர் அவர்களின் திருக்கரத்தால் முதன்முதலில் சென்னை கிரசண்ட் கல்லூரியில் 50 ஆயிரமாவது நபருக்கு பணி நியமண ஆணை வழங்கப்பட்டது. இரண்டாவதாக சேப்பாக் கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் ஒரு இலட்சமாவது இளைஞருக்கு பணி நியமண ஆணை முதலமைச்சர் அவர்களின் திருக்கரத்தால் வழங்கப்பட் டது. மூன்றாவதாக இளைஞர் நலன் மற்றும் விளை யாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை அழைத்து--கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 100 இடங்களில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்த வேண் டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையிலே சென்னை பிரசிடண்சி கல்லூரியிலே முதல் வேலைவாய்ப்பு முகாமை அமைச்சர் அண் ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார் கள். அப்போது ஒரு இலட்சத்து 50 ஆயிரமாவது பணி நியமண ஆணையை அமைச்சர் அவர்கள் வழங்கி னார்கள். அதற்குப் பிறகு இராணிமேரி கல்லூரியிலே இரண்டு இலட்சமாவது பணி நியமண ஆணையை இளைஞர்களுக்கு வழங்கிய அரசு நம்முடைய அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும் புகிறேன்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்த மூன்றாண்டுக் காலங்களில் தனியார் தொழில் நிறுவனங்களில் மட்டும், படித்த இளைஞர்களுக்கு இரண்டு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பைப் பெற் றுத் தந்திருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தொழிலகப் பாதுகாப்புத் துறை. (குறுக்கீடு) இன்னும் ஐந்து நிமிடங்களில் உரையை முடித்துவிடுகின்றேன். முன்னணி வாகன உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் தொழிலகப் பாதுகாப்புத் துறை உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் மின்னணு உற்பத்தி நிறுவனங்களின் கணிசமான தொடர் முயற்சியில் தமிழ்நாடு வாகன உற்பத்தி மற்றும் மின்னணு உற் பத்தியில் இந்தியாவிலேயே தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. 1948 தொழிற்சாலைகள் சட்டத்தின்படி, 31-3-2024 வரை 2023-2024 ஆம் ஆண்டு நிதி யாண்டில் மட்டும் 2,528 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 2023-2024 ஆம் நிதியாண்டில் கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழி லாளர்களின் சட்டத்தின்கீழ் 1,108 கட்டுமான நிறுவனங் கள் புதியதாக பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 1,562 பட்டாசுத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின் றன. இத்தொழிற்சாலைகளில் நேரடியாகவும், மறை முகமாகவும் சுமார் 3 இலட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழி லாளர்களுக்கு எதிராக 642 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் 93 இலட் சத்து 15 ஆயிரத்து 500 ரூபாய் அபராதமாக விதிக்கப் பட்டுள்ளது. அனைத்து பட்டாசுத் தொழிற்சாலைகளும் அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப் படுத்தப்பட்டு முறையான ஆய்வுகள் அதிகரிக்க அரசு உத்தரவிடப்பட்டுள்ளது.

பட்டாசுத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர் களுக்கு பட்டாசுத் தயாரிப்பின்போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு மற்றும் செயல்முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், சிவகாசியில் பாதுகாப்பு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டுள்ளது. பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலா ளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. அனைத்து வச திகளுடன்கூடிய பிரச்சார வாகனம்மூலம் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்க ளுக்கு பாதுகாப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துகளை தடுக்கும் நடவடிக்கையாக 2023-2024 ஆம் நிதியாண்டில் சிவகாசியில் இயங்கி வரும் பயிற்சி மையத்தில் 104 ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், மாநில அளவில் தலைமைச் செய லாளர் அவர்களின் தலைமையில் தீ மற்றும் தொழில கப் பாதுகாப்பு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு துறை அலுவலர்களைக் கொண்ட இந்தக் குழுவானது பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ள மற்றும் ஆய்வுக் குழுக்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை உருவாக்கியுள்ளது என் பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம். தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது அமைப் புச் சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர் களுக்கும் அவர்களைச் சார்ந்தோர்களுக்காகவும் செயல்படுகின்ற சமுதாய பாதுகாப்பு அமைப்புத் திட்ட மாகும். தமிழ்நாட்டில் 40.21 இலட்சம் தொழிலாளர்க ளும் மற்றும் 1.21 கோடி தொழிலாளர்களின் குடும்பத் தைச் சார்ந்தோர்களும் இத்திட்டத்தில் பயனடைந்து வருகின்றார்கள். தமிழ்நாட்டில் 11 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளும் 241 ஈட்டுறுதி மருந்த கங்களும் செயல்பட்டு வருகின்றன.

இந்த ஆட்சி பொறுப்பேற்றபின்பு, 19 மருந் தகங்கள் புதியதாக துவங்கப்பட்டுள்ளன. திருப்பூர் மற் றும் அதன் சுற்றுவட்டாரங்களில் வசித்து வரும் தொழி லாளர்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, திருப்பூரில் ESI மருத்துவமனை துவங்கப்பட்டுள்ளது.

மேலும், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ESI மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திருவண்ணாமலை மாவட்டம், செய் யாறு பகுதியில் அதிகமான தொழிற்சாலைகள் பெருகி வருகின்ற காரணத்தாலும் பல இலட்சம் தொழிலாளர் கள் அங்கே பணியாற்றி வருகின்ற காரணத்தால் அங்கே இருக்கின்ற தொழிலாளர்களின் கோரிக் கையை ஏற்று, விரைவிலே அப்பகுதியிலே ESI மருத் துவமனை உருவாக்குவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் (மேசையைத் தட்டும் ஒலி) முத லமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச்சென்று அது குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர் கள் இல்லாவிட்டால் தொழிற்சாலைகள் இல்லை; ஆலைகள் இல்லை; சிறு தொழில்கள் இல்லை; சிறு தொழில் முனைவோர் இல்லை. எனவே அத்தனை வளர்ச்சிக்கும் தொழில்களுக்கும் இதயமாக இருப்பது தொழிலாளர் நலத் துறையே எனக்கூறி, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

### அறிவிப்புகள்:

- **தமிழ்நாடு அமைப்புச்சாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண்/திருநங்கை ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ வாகனம் வாங்குவதை ஊக்குவித்து அதிக வருமானம் ஈட்டி சுய தொழில் செய்யும் வாய்ப்பினை உருவாக்கிட புதியதாக ஆட்டோ வாகனம் வாங்குவதற்கு ஆகும் செலவினத்தில் மானியமாக தலா ஒரு இலட்சம் ரூபாய் 1,000 பெண்/திருநங்கை ஆட்டோ ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும்.**
- **பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பட்டாசு உற்பத்தியின்போது பின் பற்ற வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் இரசாயனங்களை பாதுகாப்பாக கையாள்வது குறித்து, விருதுநகர் மாவட்டம் மற்றும் பட்டாசு தொழிற்சா லைகள் அதிக அளவில் அமையப்பெற்றுள்ள இதர 8 மாவட்டங்களில் இந்நிதியாண்டில் 7,500 தொழிலா ளர்களுக்கு 24.90 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு நாள் புத்தாக்கப்பயிற்சி வழங்கப்படும்.**
- **சமீபகாலமாக, தொழிற்சாலைகளில் உற்பத்தி பணிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் நவீன புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு உபயோகங்களால் ஏற்படும் அபாயங்களை முழுமை யாக கண்டறிந்து அதற்கேற்றபடி சட்ட அமலாக்கத் தினை மேம்படுத்தி பாதுகாப்பினை உறுதி செய்ய தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலு வலர்களுக்கு 15 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி வழங்கப்படும்.**
- **தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக் கக வலைதளத்தின் மூலம் தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனங்களுக்கு, இணைய வழியாக சேவைகளை துரிதமாக வழங்க ஏதுவாக இயக்குநர், முதுநிலை கூடுதல் இயக்குநர்கள், கூடுதல் இயக்கு நர்கள் மற்றும் இணை இயக்குநர் பதவியில் உள்ள 42 அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் 29.65 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**
- **தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய கணினி அறை வகுப்புகள் மற்றும் நிர்வாக அலுவலகத்திற்கு கணினி, பிரிண்டர், நகல் எடுப்பான், ப்ரொஜெக்டர் மற்றும் ஸ்மார்ட் வகுப்பறை, ஒளி-ஒலி சாதனங்கள் போன்ற வசதிகள் 32.89 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.**
- **சென்னை, மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால், ஒவ்வொரு தொழிலிலும் வல்லுநர்கள் மற்றும் வெற்றிகரமான ஆளுமைகளைக் கண்ட றிந்து, ஊடாடல் காணொலிகளை பதிவு செய்து, கல்வி தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பி, மாணவர்களி டையே பல்வேறு தொழில் வாய்ப்புகள் குறித்து விழிப் புணர்வு ஏற்படுத்தப்படும். இக்காணொலிகள் மெய் நிகர் கற்றல் இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்படும்.**
- **தொழிற்பயிற்சிக்கான கருத்தியல் பாடங்களை மாணவர்கள் எளிதில் கற்றுக்கொள்ளவும், கற்றல் திறனை அதிகப்படுத்தவும், பாடங்கள் மற்றும் செய் முறை விளக்கங்களைதொலைக்காட்சிகள் மூலம் கற் றுக்கொள்ளும் வகையிலும், யூடியூப் மற்றும் பிற சமூக ஊடகங்களின் மூலம் திறன் பயிற்சிகளை கற்றுக் கொள்ளவும் இணையதள வசதியுடன் கூடிய ஸ்மார்ட் டிவி, 32 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள வகுப்பறைகளில் 10.11 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**
- **அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாண வர்களின் பொது அறிவை வளர்ப்பதற்கும், சமூகத் திறன்களை மேம்படுத்திடவும் 50 அரசு தொழிற்ப யிற்சி நிலையங்களில் உள்ள மாணவர் விடுதிகளில் 92 இலட்சம் ரூபாய் செலவில் ஸ்மார்ட் டிவி மற்றும் இணையதளத்துடன் கூடிய கணினி வசதியுடன் நூல கங்கள் அமைக்கப்படும்.**
- **தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பயின்று வரும் மாணவர்களின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் பொருட்டு, 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள தொழில் 4.0 தொழில்நுட்பமைய உட்கட்ட மைப்பு வசதிகளை பயன்படுத்தி மாணவர்களின் தொழிற்பிரிவிற்கு தொடர்புடைய குறுகிய கால பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் வழங் கப்படும்.**
- **குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங் களில் பணியாற்றும் தொழிலாளர்கள் தங்களது தொழில் திறனை புதுப்பித்துக்கொள்வதற்கு நவீன தொழில்நுட்பங்கள், இயந்திரங்கள், தளவாடங்கள் மற்றும் மென்பொருட்கள் ஆகியவற்றில் பயிற்சி எடுத்துக் கொள்வதற்காக 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களின் மூலம் வசதிகள் செய்து தரப்படும்.**
- **திறன்மிக்க தொழிலாளர்களை உருவாக்கு வதை ஊக்குவிப்பதற்காக தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் சேர்ந்து பயிற்சி பெறும் மாணவர்களுக்கு பயிற்சிக் கட்டணம் மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அப்பயிற்சி கட்டணம் விரைவாக வழங்க தனி இணையதள வசதி, துறையி லுள்ள தொழில்நுட்ப நிபுணர்கள் மூலம் உருவாக்கப் படும்.**

**ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கும் அந்த மாவட்டத்தின் நோடல் அரசு தொழிற்பயிற்சி நிலை யத்தின் மூலமாக வேலைவாய்ப்பு பெற்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். எனத்தெரிவித்துக்கொள் கிறேன். 79-க்கு மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்து, அதன் மூலமான பல்வேறு கோரிக்கைகளை, பல் வேறு வினாக்களை எழுப்பி இருக்கிறார்கள். நிச்சய மாக உங்களுடைய எண்ணங்களுக்கு, கோரிக்கை களுக்கு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவைகளெல்லாம் விரைவிலே நிறைவேற்றப்படும்.**

இவ்வாறு அவர் பதிலளித்தார்.

## ரூ.92 லட்சம் மதிப்பீட்டில் அரசு தொழிற்பயிற்சி நிலைய விடுதிகளில் புதிய நூலகங்கள் அமைக்கப்படும்!

## பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும்!